1978 மார்ச் 2]

(ஆ) கூத்தாநல்லூர் பேரூராட்சி ரூ. 85,000 மதிப்பீட்டுத் தொகையில் காய்கறி மார்க்கெட் கட்டடம் கட்டுவதற்கு 30—6—77 நாளைய தீர்மானத்தில் நிர்வாக அனுமதி அளித்துள்ளது. மேற்படி மதிப்பீடு திருச்சிராப்பள்ளி நெடுஞ்சாலை மற்றும் கிராம வேலைப் பொறியாளரின் தொழில் நுட்ப அனுமதி கோரி அனுப்பப் பட்டுள்ளது என்றும் அவர் அனுமதி வழங்கியவுடன் வேலை துவக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இங்கு சைக்கிள் மூலமாக வீடுகளில் கறிகாய் கொண்டு போய் கொடுக்கும் ஒரு திட்டத்தை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கூத்தாநல்லூரில் உள்ள கட்டடத்தைப் பற்றிய கேள்வி. நீங்கள் கேட்பதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

மன்னார்குடியில் பொதுக்குழாய்கள்.

*351 வின—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி நகரில் தெருக்களுக்கு பொதுக்குழாய்கள் இணைப்பதில் சிக்கல் உள்ளதா ?

(ஆ) ஆயுள் காப்பீட்டு கழகம் தெருக்களுக்கு இணைப்புக் கொடுக்கும் திட்டத்திற்கு மறுப்பு தெரிவித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மன்னார்குடி குடிநீர் திட்டத்திற்காக அரசிடமும், ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமும் மன்னார்குடி நகராட்சி வாங்கியுள்ள கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு ஏற்ப, நிதிநிலையை சீரமைக்கக் கருதி, கடந்த இரண்டாண்டுகளாக நகராட்சி எல்லைக்குள் தெருக் குழாய்கள் அமைப்பது குறைக்கப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக வீட்டுக் குழாய் இணைப்புகள் அதிகமாகத் தரப்பட்டுள்ளன.

(ஆ) இல்லை.

சிதம்பரத்திற்கு குடிநீர் வழங்கல்.

* 352 வின—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், சிதம்பரம் நகராட்சிக்கு கொள்ளிடத்திலிருந்து குடிதண்ணீர் கொண்டுவரும் திட்டம் ஆய்வில் உள்ளதா ?